# தமிழ் இளையோர் அமைப்பு
# Tamil Youth Organization

## தமிழ் இளையோர் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர்கள், செயற்பாட்டாளர்களுக்குரிய தெளிவுரைகள் - பொறுப்புக்கள் - வரையறைகள் - அறிவுறுத்தல்கள்

### தமிழினத்தின் விடுதலை மற்றும் ஒழுக்க வழிகாட்டி

1. தமிழீழ தேசத்தின் விடுதலை, எமது மக்களின் சுதந்திரமான வாழ்வு என்ற உயர்ந்த இலட்சியத்துக்காக, தம் இன்னுயிர்களை அர்ப்பணித்த மாவீரர்கள், மக்களை நெஞ்சிலிருத்தி எத்தகைய இடர்வரினும் எம்மினத்தின் இலட்சியத்துக்காக நம்பிக்கையுடனும், அர்ப்பணிப்புடனும் செயலாற்ற வேண்டும்.
2. தமிழீழ் விடுதலைப் புலிகளின் புனிதம் அல்லது மாவீரர்களின் புனிதம் ஆகியவற்றை நாம் எப்போதும் தொடர்ச்சியாக மதித்து, பாதுகாத்து வரவேண்டும். இவற்றில் ஏதேனும் அவதூறு ஏற்படும்போது, அதற்கான நடவடிக்கைகள் எம்மால் எடுக்கப்படும்.
3. எமது விடுதலை அமைப்பின் தேவைக்கும், செயற்பாடுகளுக்கும் ஏற்றவாறு அனைவரும் புரிந்துணர்வுடன் விட்டுக் கொடுத்து தமது பணிகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.
4. ஒருங்கிணைப்பாளர்கள் தமது அமைப்பில் உள்ள செயற்பாட்டாளர்களுக்கு முன்னுதாரணமாக இருத்தல் வேண்டும். அதே போன்று அனைவரும் மக்களுக்கும் சமூகத்திற்கும் முன்னுதாரணமாக இருக்க வேண்டும்.
5. மது அருந்துதல், புகைப்பிடித்தல், பண்பாட்டுச் சீரழிவு போன்ற அனைத்து ஒழுக்கச் சீர்கேடான விடயங்களும் முற்றாக தவிர்க்கப்படல் வேண்டும்.
6. தமிழ் இளையோர் அமைப்பைச் சார்ந்த அனைவரும் இன, மத, பேதங்களைக் கடந்து அனைத்து மக்களுக்கும் மதிப்பளித்து அவர்களுடன் இணைந்து செயலாற்றுவதற்கான வாய்ப்புக்களை உருவாக்கவும் - பயன்படுத்தவும் முன்நிற்க வேண்டும்.

### உறுப்பினர்களின் கடமைகள் மற்றும் ஒழுக்க நெறிமுறைகள்

7. உறுப்பினர்களின் முழுவிபரமும் முழுமையாக தரவேண்டும்.
8. அங்கத்தவர் வயதெல்லையானது 14 முதல் 35க்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
   - அதன் பின் தொடர்ந்தும் தமிழ் இளையோர் அமைப்பின் நன்மை கருதி உதவி செய்ய விரும்புவோர் பின்புல வேலைகள் மற்றும் அவர்களின் மாநில செயற்பாட்டாளர்களிற்கு துணையாக நின்று அவர்களிற்கு உதவி செய்ய முடியும்.
9. அங்கத்தவர்கள் யாவரும் இரகசியக்காத்தலைக் கடைப்பிடித்தல் அவசியம்.
10. தமிழ் இளையோர் அமைப்பின் அங்கத்தவர்கள் அனைவரும் தமது பதவியையும் அடையாள அட்டையையும் உடமைகளையும் தனிப்பட்ட தேவைகளுக்காக தவறாகப் பயன்படுத்தக் கூடாது.
11. தமிழ் இளையோர் அமைப்பின் நிர்வாகத்தின் ஒப்புதலுடன் மாத்திரமே ஒருவர் இவ்வமைப்பின் முகமாக அடையாளப்படுத்தி பொது அமைப்புகளுக்கோ/மன்றங்களுக்கோ சமூகமளிக்க முடியும்.
12. இளையோர் அமைப்பின் செயற்பாடுகளையோ, செல்வாக்குகளையோ தனிப்பட்ட வாழ்க்கை நலனுக்காகப் பயன்படுத்தக் கூடாது.
13. தமிழீழ விடுதலைப்புலிகளின் கிளைகளில் செயற்பாட்டாளர்களாக இருப்போர், தமிழ் இளையோர் அமைப்பின் செயற்பாட்டாளராகவும் இருப்பது தவிர்க்கப்பட வேண்டும். ஏனெனில் இரண்டுமே சகோதரத்தண்மை உடன் இணைந்து பயனிக்கும் அமைப்புக்கள். இருப்பினும் நிர்வாகத்தின் ஒப்புதளுடன் தேவைக்கேற்பின் செயற்ப்பட முடியும்.

14. இளையோர் அமைப்பில் இருந்து விலகுவதாக இருந்தால் ஒரு மாதத்திற்கு முன்னர் இளையோர் அமைப்பு நிர்வாகத்திற்குத் தகுந்த காரணத்துடன் எழுத்து மூலமாக அறிவிக்க வேண்டும்.
15. சுவிஸ் தமிழ் இளையோர் அமைப்பு அங்கத்தவர்களின் சீருடை சுவிஸ் தமிழ் இளையோர் அமைப்பின் நிர்வாகத்தால் தீர்மானிக்கப்படும். 36 வயதின் பின் தமிழ் இளையோர் அமைப்பு சீருடையுடன் செயற்பட முடியாது.
16. தேசியம் சார்ந்த எழுச்சி – பண்பாட்டு – கலை நிகழ்வுகளில் தமிழ் இளையோர் அமைப்புக்குரிய சீருடையினை தவறாது அணிதல் வேண்டும். தேவைப்படின் தமிழ் இளையோர் அமைப்பின் நிர்வாகத்தின் சம்மதத்துடன் குறிப்பிட்ட நிகழ்வில் சீருடை அணிவதைத் தவிர்கலாம்.

**ஒன்றுகூடல்கள் மற்றும் நிகழ்வுகள்**

17. அங்கத்தவர்கள் யாவரும் ஒவ்வொரு வருடமும் கட்டாயமாக பங்குபெற வேண்டிய நிகழ்வுகள்:
    - தமிழ் இளையோர் அமைப்பின் வருடாந்த சந்திப்பு
    - மே18 நினைவு நாள்
    - மாவீரர் நாள்

    இந்நிகழ்வுகளில் ஏதேனும் ஒன்றில் சமூகமளிகாமல் இருப்பின், அதற்கு தகுந்த காரணத்தினை அறியத்தரவேண்டும்.
18. மேற்குறிப்பிட்ட முக்கிய நிகழ்வுகளைத் தவிர்த்து, தங்கள் மாநிலங்களில் வருடத்திற்கு குறைந்தது மூன்று சந்திப்புகளில் (நிகழ்வுகள் - ஒன்றுகூடல்கள்) சமூகமளிக்க வேண்டும். அவ்வாறு சமூகமாளிக்காத பட்சத்தில் அங்கத்தவர் தகுதியை இழக்க வேண்டி நேரிடும்.
19. தமிழ் இளையோர் அமைப்பால் முன்னெடுக்கப்படும் அனைத்து நிகழ்வுகளிலும் புகைப்படங்கள் மற்றும் ஒலிப்பதிவுகள் பதியப்படும். தங்கள் அடையாளத்தை புகைப்படங்களிலோ, ஒலிப்பதிவுகளிலோ தெரியப்படுத்த விரும்பாதோர் முன்கூட்டியே அறியத்தர வேண்டும்.
20. பொது நிகழ்வுகளில் தமிழ் இளையோர் அமைப்பின் வேலைத்திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்தல் வேண்டும். தாங்கள் விரும்பினால் எமது அமைப்பின் வேலைத்திட்டங்கள் முடிந்தவுடன் அல்லது ஒருங்கிணைப்பாளரிடம் அனுமதி பெற்று வேறு வேலைத்திட்டங்களில் பங்களிப்பு செய்யலாம்.
21. தமிழ் இளையோர் அமைப்பின் அங்கத்தவர்கள் எமது செயற்பாடுகளுடன் தொடர்பில்லாத பிற விடயங்களை எமது நிர்வாகத்துக்குட்பட்ட விடயங்களிலும் ஒன்றுகூடல்களிலும் தவிர்க்க வேண்டும்.

**உறுப்பினர்களின் பொறுப்புகள் மற்றும் செயற்பாடுகளின் மேலாண்மை**

22. செயற்பாடுகளில் ஏதேனும் தவறுகள் நடைபெற்றால் அவ்விபரம் உடனே உரிய ஒருங்கிணைப்பாளருக்கு முழுமையாக அறிவிக்கப்படல் வேண்டும்.
23. தாங்கள் பொறுப்பெடுத்த பணிகளில் தங்களின் இயலாமைக்கு மேற்பட்டதாகத் தடங்கல்கள் ஏற்படின் அவை பற்றித் தங்களுக்குப் பொறுப்பாகவுள்ளவருக்குத் தாமதமின்றி முறையாக அறிவிப்பது தங்களின் கடமையாகும்.
24. தவறுகள் நடைபெற்றால் உடனே அவ்விபரம் உரிய பொறுப்பாளருக்கு முழுமையாக அறிவிக்கப்பட வேண்டும்.
25. நிர்வாகக் கட்டமைப்பின்படி தங்களுக்குத் தரப்பட்டுள்ள பொறுப்புகளில் அல்லது வேலைத்திட்டங்களில் ஒவ்வொருவரும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

26. சுய விருப்பு, வெறுப்புக்களுக்கு இடமளியாமல் அமைப்பை சுமுகமாக நடாத்தி செல்ல தலைமை ஒருங்கிணைப்பாளருக்கு உதவுதல் சகலரினதும் கடமையாகும். (உதாரணமாக பெரும்பான்மையான செயற்பாட்டாளர்களின் விருப்பின் அடிப்படையில் அல்லது எம்மை வழிநடத்துபவர்கள் ஒரு விடயத்தில் முடிவெடுத்தால் அம்முடிவை அமைப்பில் உள்ள அனைவரும் ஏற்றுக்கொண்டு அவ்வேலைத்திட்டத்தை முன்னெடுத்தல் வேண்டும்.)

**சமூக ஊடகங்கள் மற்றும் ஊடக நடவடிக்கைகள்**

27. முறையான அனுமதி பெறப்பட்டே தமிழ் இளையோர் அமைப்புத் தொடர்பான எந்த விடயமும் ஊடகங்களுக்குச் செவ்வி வழங்க முடியும். தனிப்பட்ட முறையில் அனுமதியின்றிச் செவ்வி வழங்குவது தவிர்க்க வேண்டும்.
28. தமிழ் இளையோர் அமைப்பின் சமூக ஊடக (Instagram, Facebook, Twitter, …) மேலாண்மையின் பாதுகாப்பை உறுதி செய்வதில் நாம் முழு கவனத்தை செலுத்துகிறோம். தமிழ் இளையோர் அமைப்பின் சமூக ஊடகங்களில் எதுவும் பதிவேற்றும் முன் நிர்வாகத்தின் ஒப்புதலை பெற வேண்டும்.

**தமிழ் இளையோர் அமைப்பு – சுவிஸ்**
10.03.2025